An Institute of

NIE
NATIONAL INSTITUTE OF EDUCATION
SINGAPORE

NANYANG TECHNOLOGICAL UNIVERSITY
SINGAPORE

NTU OPEN HOUSE 2025

# Tamil Studies & Education

The Teaching Scholars Programme is a premier scholars programme by Nanyang Technological University and it is administered by the National Institute of Education (Singapore).

Follow us

Scan here for more information

NIE
NATIONAL INSTITUTE OF EDUCATION
SINGAPORE

An Institute of

NANYANG TECHNOLOGICAL UNIVERSITY
SINGAPORE

## Asian Languages & Cultures

# Tamil Language

# Teaching Scholars Programme



**Join TSP.Visit tsp.nie.edu.sg**

The TSP Programme is a premier scholars programme by NTU and administered by NIE (Singapore).

bit.ly/niete

scholars@nie.edu.sg

tsp.nie.edu.sg

# National Institute of Education

Asian Languages and Cultures Academic Group

Tamil Language and Culture Division

தமிழ்மொழி, பண்பாட்டுத்துறை தமிழாசிரியராக விரும்பும் விண்ணப்பதாரர்களுக்குப் பணிக்கு முந்திய பயிற்சிகளையும் பணியிடைட் பயிற்சிகளையும் வழங்குகிறது. இப்பிரிவு, கல்வியியல் பட்டய வகுப்பு **(Dip.Ed),** பட்டத்திற்குப் பிந்திய கல்வியியல் பட்டய வகுப்பு **(PGDE),** இளங்கலை (இரு முதன்மைப்பாடங்கள் கல்வியியல்) **(B.A.(Ed.)),** முதுகலைத் தமிழ் ஆய்வு வகுப் **(M.A.),** முதுகலைக் கல்வியியல் வகுப்பு **(M.Ed.),** முனைவர் பட்டம் **(PhD),** துறைத்தலைவர்களுக்கான பள்ளி நிர்வாகமும் தலைமைத்துவமும் **(MLS)** ஆகிய பயிற்சித்திட்டங்களை வழங்கி வருகிறது.

தேசியக் கல்விக்கழகம் 2016ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல், தமிழில் இளங்கலை (கல்வியியல்) பட்டக்கல்வியையும் (B.A.(Ed.)) வழங்கி வந்துள்ளது. இப்போது வரும் ஆகஸ்டு 2023 முதல், இளங்கலை (இரு முதன்மைப்பாடங்கள் . கல்வியியல்) (B.A. Double Major/Education என்ற பெயரில் தமிழியலையும் கல்வியியலையும் (Tamil Studies & Education) பட்டக்கல்வியில் வழங்கவுள்ளது. இந்தப் பட்டக்கல்வி வகுப்பு, திறன்மிகு விண்ணப்பதாரர்கள் கல்வியியலில் பொருள் பொதிந்த பயணத்தை மேற்கொள்ளும் வகையில் ஒரு பெரும் வாய்ப்பை வழங்குகிறது. இது விருப்பமுடைய விண்ணப்பதாரர்களுக்கு அவர்தம் பட்டத்தொழிலுக்கான திறன்களையும் பணி முன்னேற்றத்தையும் மேலும் சிறப்பானதாக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்தப் பட்டவகுப்புப் பயிற்சி, மாணவ ஆசிரியர்கள் தம் வகுப்பறைகளிலும் அவை சார்ந்த நடைமுறைகளிலும் செம்மையாகக் கற்பிக்க வழிவகை செய்கிறது; தமிழ்மொழி, இலக்கியம், தமிழ் தொடர்பான புலங்கள், கல்வியியல் ஆகியனவற்றின் மீதான ஆழமான புரிந்துணர்வையும் அவர்களுக்கு வழங்குகிறது.

## கற்றல் விளைவுகள்:

**இளங்கலை (இரு முதன்மைப்பாடங்கள் / கல்வியியல்) (B.A. Double Major/Education என்ற பெயரில் அமையும் பட்டக்கல்விக்கான பயிற்சியின் இறுதியில் மாணவ ஆசிரியர்கள் பின்வருவனவற்றில் மேம்பட்டிருப்பர்:**

- தமிழ்மொழி, இலக்கிய உள்ளடக்கங்களில் ஆழமான புரிந்துணர்வைப் பெற்றிருத்தல்
- பல்வேறு வகையான ஆசிரியவியல் புலங்களையும் அவற்றிற்கான காரணகாரியங்களையும் புரிந்து வைத்திருத்தல்
- தாம் பெற்ற ஆசிரியவியல் அறிவை வகுப்பறை நடைமுறைகளில் பயன்படுத்துதல்
- பட்டத்தொழில் மேம்பாட்டுக்கான சீரிய, செம்மையான எழுத்துத் திறன்கள், தொடர்புத திறன்கள் போன்ற பயன்மிக்க திறன்களை மேம்படுத்திக்கொள்ளுதல்
- ஆய்வுத் திறன்கள், கற்பித்தல் திறன்கள் போன்ற இன்றியமையாத திறன்களைப் பெற்றிருதல்
- தினசரி வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் அற இலக்கியக் கருத்துகளைப் பாடங்களில் இணைத்துக் கற்பிக்கும் பல்வேறு வழிமுறைகளை அறிந்திருத்தல்

## BA Double Majors Programme

NIE - NTU TEACHING SCHOLARS PROGRAMME
Tamil Studies & Education

### MAJOR: Tamil Studies & Education

தமிழியலும் கல்வியியலும்

### MINOR: Tamil Literature & CCE (NIE)

தமிழ் இலக்கியமும் நற்பண்பு குடியியல் கல்வியும்



# மாணவர்களின் கருத்துகள்

தேசியக் கல்விக் கழகத்தில் சேர்ந்த நாள் முதல் தமிழ்மொழி மீது நான் கொண்ட ஆர்வம் மேன்மேலும் அதிகரித்துள்ளது. ஆசிரியராக வேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவு நிறைவேறவுள்ளது என்பதை எண்ணும் போது எனக்கு மிக்க மகிழ்ச்சி. இங்கு நிறைய புதிய விஷயங்களை கற்றுக்கொள்வதோடு ஆசிரியர் பணியின் நுணுக்கங்களையும் நான் கற்றுக்கொண்டுள்ளேன். எனது இப்பயணம் தொடர ஆவலாக உள்ளேன்.



செல்வி துர்கா

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு” என்கிற வள்ளுவரின் பொய்யாமொழிக்கு இணங்க, எந்த அளவுக்குக் கற்றலை நாம் ஆழப்படுத்துகிறோமோ, அந்த அளவிற்கு அறிவானது மேம்படும். கற்றலை ஆழப்படுத்த நமக்குப் பெரிதும் உதவுவோர், நம் ஆசிரியப் பெருமக்களே ஆவர். அவ்வகையில் தேசிய கல்விக்கழகத்தில் எனக்கு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள், சிறந்த கல்வியை வழங்குவோராகத் திகழ்வதோடு, நாங்கள் முன்னேறப் பெரும் ஊக்கமாகவும் விளங்குகின்றனர்.



செல்வி நந்தினி

தேசியக் கல்விக் கழகத்தில் நான் தமிழ் படிக்கத் தொடங்கிய நாள் முதல் பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டு வருகிறேன். ஓர் ஆசிரியர் வகுப்பில் எவ்வாறு செயல்பட வேண்டும், அவர் எவ்வாறு பாடத்திற்குத் தயார் செய்யவேண்டும் என்பன போன்ற உத்திகளைச் சக மாணவர்களோடு சேர்ந்து நானும் கற்றுக்கொண்டேன்.



செல்வி ஸ்ருதிகா

நான் தேசியக் கல்விக்கழகத்தில் முதலாமாண்டுப் பட்டக்கல்வி பயிலும் மாணவ ஆசிரியர். தமிழ் வரலாறு, ஒலியியல், சொல்லியல், தமிழ் இலக்கண நூல்கள், தமிழ் மொழியைக் கற்பிக்கும் முறைகள் முதலியவற்றை இக்கழகத்தில் உள்ள விரிவுரையாளர்கள் எனக்கு அறிமுகம் செய்தனர். இங்கு உள்ள மேம்பட்ட தொழில்நுட்பக் கருவிகளும் கற்றல் வளங்களும் என்னைப் பிரமிக்க வைத்தன.



செல்வி கஜோல்



**பொங்கல் கொண்டாட்டம் 2024**



**வாராந்திர மாணவ ஆசிரியர் கருத்தரங்க நிகழ்வில் கல்வியாளர்களுடனான சந்திப்பும் கலந்துரையாடலும், 2024**




**சிறந்த மாணவ ஆசிரியர் விருதை வென்றவர், 2024**



**தீபாவளி கொண்டாட்டம் 2024**